செய்தி வெளியீடு எண். 186 நாள் : 05.04.2017

**திருவள்ளுர் மாவட்டத்தில் 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு மாணவர்களுக்கு உயர்கல்வி வழிகாட்டுதல் முகாம் 06.04.2017 மற்றும் 07.4.2017 ஆகிய நாட்களில் நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

~~~~~

எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ் 2 மாணவர்களுக்கு உயர்கல்வி வழிகாட்டுதல் முகாம் வரும் 06.04.2017 மற்றும் 07.04.2017 ஆகிய தேதிகளில் திருவள்ளுர் மாவட்டத்தில் உள்ள 14 ஒன்றியங்களை சார்ந்த 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பினை நிறைவு செய்த பள்ளி மாணவர்களுக்கு 16 முகாம்களில் நடைபெற உள்ளது.

| வ.எண் | ஒன்றியம் | முகாம் |
|---|---|---|
| 1. | திருவள்ளுர் 06.04.2017 | ஜெயா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருநின்றவூர் |
| 2. | எல்லாபுரம் 07.04.2017 | விவேகானந்தா மெ.மே.நி.பள்ளி, ஊத்துக்கோட்டை |
| 3. | பூவிருந்தவல்லி 06.04.2017 | ஜெயா பொறியியல் இன்ஸ்டியுட் ஆப் டெக்.(SIET), பாரிவாக்கம் பூவிருந்தவல்லி (பைபாஸ்) |
| 4. | பூவிருந்தவல்லி - ஆவடி பகுதியை சார்ந்த பள்ளிகள் 06.04.2017 | ஆலிம் முகமது பொறியியல் கல்லூரி, முத்தாபுதுப்பேட்டை, ஆவடி |
| 5. | பூண்டி 06.04.2017 | விவேகானந்தா மெட்ரிக் மேல்நிலைப்பபள்ளி, ஊத்துக்கோட்டை |
| 6. | திருவாலங்காடு 07.04.2017 | எல்.சி.ஆர் காலெஜ் ஆப் ஜெயா குருப்ஸ், காஞ்சிப்பாடி, கனகம்மாசத்திரம் அருகில் |
| 7. | கடம்பத்துார் 07.04.2017 | வெங்கடேஷ்வரா பொறியியல் கல்லூரி, திருப்பாச்சூர். |
| 8. | திருத்தணி 06.04.2017 | எல்.சி.ஆர் காலெஜ் ஆப் ஜெயா குருப்ஸ், காஞ்சிப்பாடி, கனகம்மாசத்திரம் அருகில் |
| 9. | பள்ளிப்பட்டு 07.04.2017 | இ.எஸ்.எஸ்.ராமன் கலைக் கல்லூரி, பொதட்டூர்பேட்டை |
| 10. | ஆர்.கே.பேட்டை 07.04.2017 | ஸ்ரீ அய்யன் வித்யாஷ்ரம் மேல்நிலைப்பள்ளி, வெள்ளாத்தூர் |
| 11. | கும்மிடிப்பூண்டி 07.04.2017 | ஆர்.வி.எஸ்.பத்மாவதி பொறியியல் கல்லூரி, செதில்பாக்கம் |
| 12. | புழல் 06.04.2017 | வெள்ளையன் செட்டியார் மே.நி.பள்ளி, திருவொற்றயூர் |
| 13. | வில்லிவாக்கம் 06.04.2017 | சேதுபாஸ்கரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி. புதூர், அம்பத்தூர் |
| 14. | வில்லிவாக்கம் 06.04.2017 | L&T construction, இராமாபுரம், போரூர் |
| 15. | சோழவரம் 07.04.2017 | சிவந்தி ஆதித்தனார் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, புழல் |
| 16. | மீஞ்சூர் 07.04.2017 | ஸ்ரீ தேவி அறிவியல் மற்றும் கலைக் கல்லூரி, பொன்னேரி |
~~~~~

2016-2017-ம் கல்வியாண்டு 10 மற்றும் 12ம் வகுப்பு பொதுத்தேர்வை நிறைவு செய்த மாணவர்களின் நலன் கருதி இடைநிற்றல் இல்லாத உயர்படிப்பை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் வேலைவாய்ப்பு அமைந்துள்ள துறைகளை தேர்வு செய்வது தொடர்பான ஆலோசனை கருத்தரங்கு, தமிழக அரசால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த பயிற்சி திருவள்ளூர் மாவட்டத்தில் வரும் 6ம் மற்றும் 7ம் தேதிகளில் காலை 9.00 மணி முதல் மாலை 04.30 மணி வரை 16 மையங்களில் நடக்கிறது.

நிகழ்ச்சியில் கல்வியினால் உயர்வு பெற்ற மருத்துவர்கள், பொறியாளர்கள். பேராசிரியர்கள், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், அந்தந்த பகுதி வங்கி மேலாளர்கள், மகளிர் திட்ட அலுவலர்கள். புதுவாழ்வு அலுவலர்கள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த வல்லுநர்கள் கலந்து கொண்டு மாணவ மாணவியர்களுக்கு மேற்படிப்பு மற்றும் வேலை வாய்ப்பு சார்ந்த ஆலோசனை வழங்குகிறார்கள்.

எனவே, 10 மற்றும 12ம் வகுப்பு படிப்பை நிறைவு செய்த மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயன்பெறலாம்.

மேலும், இம்முகாம்களைத் தவிர்த்து, 07.04.2017 அன்று மெய்நிகர் வகுப்பறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 24 அரசு மேல்நிலைப்பள்ளிகளில் 12ம் வகுப்பு மாணவர்கள் வேலை வாய்ப்பு மற்றும் வழிகாட்டுதல் முகாமில் தங்கள் பெற்றோருடன் கலந்துகொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**